**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LLB., (Hons).,**
நீதித்துறை நடுவர் எண்.3 (மு.கூ.பொ),
திருப்பத்தூர்.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 16 -ஆம் நாள் திங்கட்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 57/2018</u>**

**<u>F.NO. 7000366/2018</u>**
**<u>CNR.NO. TNTU02-000899-2018</u>**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
நாட்றம்பள்ளி காவல் நிலையம்,
நாட்றம்பள்ளி.
குற்ற எண்.44/2018 ...... புகார்தாரர்

// எதிரிடை//

ராமகிருஷ்ணன், த/பெ. துரைசாமிகவுண்டர் .... குற்றம் சாட்டப்பட்டவர்

(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண். 57/2018 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | நாட்றம்பள்ளி காவல் நிலையம், குற்ற எண்.44/2018 |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் விவரம் | | |
| 3 | பெயர் | ராமகிருஷ்ணன் த/பெ. துரைசாமிகவுண்டர் |
| 4 | தொழில் | - |
| 5 | முகவரி | பல்லக்கொள்ளை, பச்சூர், நாட்றம்பள்ளி, திருப்பத்தூர் மாவட்டம். |

KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

| | | | | |
|---|---|---|---|---|
| நாள் | | | | |
| 6 | குற்ற நிகழ்வு | 28.01.2018 | | |
| 7 | புகார் | 29.01.2018 | | |
| 8 | கைது செய்யப்பட்ட நாள் | 29.01.2018 | | |
| 9 | எதிரி பிணையில் வந்த நாள் | 03.02.2018 | | |
| 10 | வழக்கு துவங்கிய நாள் | 19.07.2018 | | |
| 11 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 16.03.2026 | | |
| 12 | தீர்ப்பு | விடுதலை | | |
| 13 | தாமதத்திற்குரிய காரணம் | -- | | |
| வழக்கின் நிலை | | | | |
| 14 | பிணைக்காலம் | -- | | |
| 15 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 19.06.2018 | | |
| 16 | BNSS பிரிவு 263 (முதல் கேள்வி) | 24.07.2018 | | |
| 17 | பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு | | | |
| 18 | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | அரசு தரப்பு சாட்சி | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா. 1 | 21.12.2023 | 21.12.2023 |
| | | அ.சா. 2 | 21.12.2023 | 21.12.2023 |
| | | அ.சா. 3 | 10.01.2024 | 10.01.2024 |
| | | அ.சா. 4 | 10.01.2024 | 10.01.2024 |
| | | அ.சா. 5 | 09.08.2024 | 09.08.2021 |
| | | அ.சா. 6 | 30.08.2024 | 30.08.2024 |
| 19 | BNSS பிரிவு 351(1)(b) (வினாவல்) | 13.03.2026 | | |
| 20 | தலைமறைவு எதிரிகளின் விவரங்கள் / அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

| | | |
|---|---|---|
| 21 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை |

இவ்வழக்கு கடந்த 19.06.2018 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 16.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களும், எதிரிகளுக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N. தமிழ்செல்வன் B.A., B.L., அவர்களும், ஆஜராகியிருக்க, ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

(1) இவ்வழக்கில் கடந்த 28.01.2018-ம் தேதி இரவு 10.00 மணிக்கு புகார் சாட்சி ஈஸ்வரியைப் பார்த்து எதிரி ராமகிருஷ்ணன் "ஏய் தேவிடியா வெளியே வா, இன்னும் இந்த வீட்டில் உனக்கு என்ன வேலை இந்த வீடு இனிமேல் எனக்கு சொந்தமானது" என்று அசிங்கமாகத் திட்டி, புகார் சாட்சி ஈஸ்வரியை, கத்தியால் அவரது வலது கண் அருகேயும், இடது கை மடிப்பிலும், வலது கை மணிக்கட்டுக்கு அருகேயும் சரிமாரியாக வெட்டி கொடுங்காயம் ஏற்படுத்தி, கையில் இருந்த கத்தியை காட்டி நீ வீட்டை விட்டு வெளியே செல்லாவிட்டால் உன்னை கொலை செய்யவும் தயங்கமாட்டேன் என மிரட்டியுள்ளார். எனவே, எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) - இன்படி இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2) இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு,

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC), Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜரானவுடன் குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரியிடம் வினவியபோது, எதிரி அதை மறுத்ததால் அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

(3) அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11** வரையிலான ஆவணங்கள் மற்றும் **அ.சா.பொ.1** ம் வழக்கிற்கு ஆதாரங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(4) அரசு தரப்பு சாட்சிகள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரி "பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**(5) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

புகார்சாட்சி திருமதி. ஈஸ்வரி கடந்த 29.01.2018 அன்று திருப்பத்தூர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவருவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆலங்காயம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு. ரகுவரன் அங்கு சென்று புகார்சாட்சி கொடுத்த **அ.சா.ஆ.6** புகார்வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டு, **அ.சா.ஆ.7** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது புலன்விசாரணையை முடித்து இறுதியறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்.

KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

**6). இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான u/s.294(b), 324, 506(2) of IPC –இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.**

**அரசு தரப்பு சாட்சிகளின் நீதிமன்ற விசாரணையின் சுருக்கம் :**

(i) இவ்வழக்கின் புகார் சாட்சியான திருமதி. ஈஸ்வரியை நீதிமன்ற விசாரணைக்கு ஆஜர்படுத்தாத நிலையில், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.1 காந்தீசன் மற்றும் அ.சா. 2 கணபதி ஆகியோர் தங்களது நீதிமன்ற விசாரணையில் "பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்கள் எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது" என்றும் சாட்சியம் அளித்து பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்கள் (அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ 6 வரை) குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3 பாலாஜி மற்றும் அ.சா.4 வினோதினி ஆகியோர், "இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது, யார் யாரை அடித்தார்கள் என்ற விவரமும் தெரியாது" என்றும் சாட்சியம் அளித்ததால், மேற்படி சாட்சிகளை பிறழ் சாட்சிகளாகப் பாவித்து குறுக்கு விசாரணை செய்தபோதும், அரசு தரப்பிற்கு சாதகமாக எந்த பதிலையும் அளிக்கவில்லை.

(ii) இவ்வழக்கின் அ.சா.5 மருத்துவர் திரு. செந்தில் குமார் அவர்கள் இவ்வழக்கில் காயம்பட்ட புகார்தாரர் திருமதி. ஈஸ்வரிக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று கூறி அ.சா.ஆ 5 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் வழங்கியது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கின் அ.சா.6 காவல் உதவி ஆய்வாளர் திரு. ரகுவரன்

KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

அவர்கள், புகார்தாரர் அளித்த (அ.சா.ஆ.6) புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில், (அ.சா.ஆ.7) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் காந்தீசன் மற்றும் கணபதி ஆகியோர் முன்னிலையில் (அ.சா.ஆ 8) மாதிரி வரைபடம் மற்றும் (அ.சா.ஆ 9) பார்வை மகசர் தயார் செய்து, சம்பவயிடத்தில் இருந்து அ.சா.பொ 1 வெட்டுக்கத்தி ஒன்றை (அ.சா.ஆ.10) கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி, அதனை (அ.சா.ஆ 11) படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, வழக்கு சம்பவத்தில் காயமடைந்த அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த திரு. செந்தில்குமாரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் (அ.சா.ஆ 5) பெற்று, தனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி),324,506(ii) இறுதி அறிக்கை தாக்கல் செய்தது வரை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்

(iv) புகார் சாட்சி தனது புகார் வாக்குமூலத்தில், எதிரி அசிங்கமாகப் பேசி, கத்தியால் தாக்கி பலத்த இரத்தகாயம் ஏற்படுத்தி, கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்று கூறியுள்ளபோதிலும், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகி மேற்கண்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கவில்லை **(அரசு தரப்பில், புகார்சாட்சியான திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி வட்டம், எண்.1 கொத்தூர் மற்றும் பள்ளக்கொல்லையில் வசித்து வந்த (லேட்) தேவேந்திரன் மனைவி ஈஸ்வரி கடந்த 5 ஆண்டு காலமாக மேற்படி முகவரியில் இல்லை என்று கிராம நிர்வாக அலுவலரின் சான்று பெற்று இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மேற்படி சாட்சி விட்டொழிக்கப்பட்டுள்ளது .)**

(v) இவ்வழக்கில் புகார்தாரரை சாட்சியாக விசாரிக்க தவறியுள்ளதாலும், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பிற்கு முரண்பட்டு

KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.5 மருத்துவர் மற்றும் அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து இக்குற்ற சம்பவத்தில் எதிரியின் ஈடுபாடு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**7). இறுதியாக,**

அரசு தரப்பு தரப்பில், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள u/s.294(b), 324, 506(2) of IPC –இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271 (1)–இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

எதிரி எழுதிக்கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் **C.P.No.12/2018**–இல் உள்ள வழக்குச்சொத்தான **வெட்டுக்கத்தி –1** ( அதன் மொத்த நீளம் சுமார் 35 செமீ, அதில் மரக்கைபிடியின் நீளம் சுமார் 13 செமீ, இரும்பு பகுதியின் நீளம் சுமார் 22 செமீ) மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல,

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by
KOVENDHAN S
Location: Tirupathur,
Tirupathur District.

அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, திருத்தங்களுக்குப் பிறகு 2026–ஆம் வருடம் மார்ச் மாதம் 16 –ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

நீதித்துறை நடுவர் எண்.III (மு.கூ.பொ),
திருப்பத்தூர்.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| **அ.சா.1** | திரு.காந்தீசன் |
| **அ.சா.2** | திரு.கணபதி |
| **அ.சா.3** | திரு.பாலாஜி |
| **அ.சா.4** | திருமதி. வினோதினி |
| **அ.சா.5** | திரு. செந்தில் குமார் (மருத்துவர்) |
| **அ.சா.6** | திரு. ரகுவரன், காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சாட்சி ஆவணங்கள்**

| | |
|---|---|
| **அ.சா.ஆ.1** | பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| **அ.சா.ஆ.2** | கைப்பற்றுதல் மசரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| **அ.சா.ஆ.3** | பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| **அ.சா.ஆ.4** | கைப்பற்றுதல் மசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| **அ.சா.ஆ.5** | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| **அ.சா.ஆ.6** | புகார் வாக்குமூலம் |
| **அ.சா.ஆ.7** | முதல் தகவல் அறிக்கை |
| **அ.சா.ஆ.8** | மாதிரி வரைபடம் |
| **அ.சா.ஆ.9** | பார்வை மகசர் |

| | |
|---|---|
| **அ.சா.ஆ.10** | கைப்பற்றுதல் மகசர் |
| **அ.சா.ஆ.11** | படிவம் –91 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்– CP.12/2018**

**அ.சா.பொ –1 :** வெட்டுக்கத்தி –1 ( மொத்த நீளம் சுமார் 35 செமீ, மரக்கைபிடி நீளம் சுமார் 13 செமீ, இரும்பு பகுதியின் நீளம் சுமார் 22 செமீ)

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்று ஆவணங்கள் – இல்லை**

**குறிப்பு**

1. சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணை சமயம் எதிரி பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு பற்றி சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச்சொத்து பற்றிய உத்தரவை வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

நீதித்துறை நடுவர் எண்.III (மு.கூ.பொ),
திருப்பத்தூர்.